# பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளை கண்டிக்கிறோம்

**நாள் : 03-09-2007 திங்கட்கிழமை  இடம் : உளுந்தூர்பேட்டை**

***விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை, காமவெறியர்களுடைய கூடாரமாக மாறிவருவது நமக்கெல்லாம் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது.***

அண்மையில் உளுந்தூர்பேட்டை பச்சையப்பா நகரில் **18 வயது பெண் 04-08-2007** அன்று 5 கயவர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டாள். இதோடு விட்டு விடவில்லை காமவெறியர்கள். அவளுடைய முகத்தை அடையாளம் தெரியாதபடி எரித்தும் விட்டனர்.

இதே மாதத்தில் **23-08-2007 அன்று களத்தூர் கிராமத்தில் 17 வயது தலித் பெண்** 4 கயவர்களால் மிகக் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறாள். அருகாமையிலுள்ள **கடலூர் மாவட்டம் சார்ந்த விஜய மாநகரத்தில் இது போன்று 13 வயது சிறுமியை**, ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது 3 காமவெறியர்கள் இளநீரில் பூச்சிக்கொல்லி விஷத்தை கலந்து, சிறுமியை குடிக்க வைத்து மயக்கமடைந்த நிலையில் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். சிறுமி வாயில் நுரையும், இரத்தமும் வர துடிதுடித்து இறந்து விட்டாள். சிறுமியின் பிணத்தை 3 வெறியர்களும் கரும்பு தோட்டத்திற்குள் எறிந்து விட்டு தலைமறைவாகிவிட்டனர்.

பெண்களை, தலித் பெண்களை பாலியல் வன்முறை செய்வது, அவர்களை கொலை செய்து, வீசி எறிவது இதெல்லாம் இப்பகுதியில் காமவெறியர்களின் மிருகத்தை விட கேவலமான செயலாக தொடர்ந்து நடந்து வருகிறது.

இப்படி பெண்களுக்கு எதிராக தொடருகின்ற வன்கொடுமைகளும், பாலியல் அத்துமீறல்களும் நாகரீக சமூகத்தை தலைகுனிய வைக்கிறது. பெண்கள் உயிரோடு வாழவும், கவுரவமாக வாழ்வதற்குமான உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றன.

காவல்துறையின் கண்டு கொள்ளாத போக்கினால் இப்படிப்பட்ட காமவெறியர்கள் எந்தவிதமான அச்சமுமின்றி தொடர்ந்து பெண்களை குரூரமாக வதைத்தும், கொன்றும் தங்கள் வெறியை தீர்த்துக் கொள்கின்றனர்.

***இது அந்த பகுதி மக்களிடையே குறிப்பாக பெண்கள், தலித் பெண்களிடையே பயத்தையும், பாதுகாப்பு இன்மையையும் அதிகரித்து இருக்கிறது.***

***மாவட்ட நிர்வாகிகளும், காவல்துறை உயர் அதிகாரிகளும் உடனடியாக தலையிட்டு இந்த பெண் விரோத போக்கை தடுத்து நிறுத்தி, பெண்களுக்கு சமூகத்தில் பாதுகாப்பை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.***

***பெண்கள் உயிர் வாழும் அடிப்படை உரிமையை பாதுகாத்து தரவேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழக அரசுக்கு உண்டு. தமிழக அரசு தன்னுடைய பொறுப்பை தட்டிக் கழிக்காமல் உடனடியாக பெண் எதிர் கொடுமைகளை, சித்திரவதைகளை தடுத்து நிறுத்தவேண்டும்.***

## வன்கொடுமையற்ற சமுதாயத்தை படைப்போம்!
## அனைத்து விதமான சித்திரவதைகளையும் ஒழிப்போம்!
## பெண்கள் உயிர் வாழும் உரிமை! அடிப்படை உரிமை!

# தமிழக பெண்கள் எழுச்சி அமைப்பு
# தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம்